கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)

(செப்ரம்பர்/ஒக்டோபர் 2010)

LIBRARY
11 FEB 2011
Eastern University, Sri Lanka.

# ECO 201 Micro Economics

நேரம் : 03. மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

01. (அ) எல்லைப்பயன் (MU), மொத்தப்பயன் (TU) என்பவற்றை வரைபடங்களின் துணையுடன் வேறுபடுத்திக் காட்டுக?

(10 புள்ளிகள்)

(ஆ) A என்னும் நுகர்வோன் ஒருவன் கொள்வனவு செய்கின்ற X,Y என்ற இரு வேறுபட்ட பொருட்களது எல்லைப்பயன் சார்புகள் பின்வருமாறு தரப்படுகின்றன.

$MUx = 240 - 20x$

$MUy = 320 - 40y$

A என்பவரின் மாதாந்த செலவிடத்தக்க வருமானம் 4400 ரூபா ஆகும். x என்னும் பொருளில் ஒரு அலகினை 20 ரூபாவிற்கும், y என்னும் பொருளை 40 ரூபாவிற்கும் A கொள்வனவு செய்கின்றார்.

I. A என்பவர் தனது செலவிடத்தக்க வருமானம் முழுவதையும் x, y ஆகிய பொருட்களின் கொள்வனவில் செலவிடுவார் எனின், உச்சப் பயனைப் பெறும் நிலையில் நுகர்வோனின் இரு பொருட்களினதும் கொள்வனவுச் சேர்க்கை என்ன?

(05 புள்ளிகள்)

II. x என்னும் பண்டத்தின் விலை 50% குறைவடையும் எனின் y யினது விலை மாறாத போது உச்சப்பயனுக்கான புதிய கொள்வனவு சேர்க்கை என்ன?

(05 புள்ளிகள்)

02. (அ) சமபயன் வளைகோடு ஒன்றின் பிரதான இயல்புகளை விளக்குக?

(05 புள்ளிகள்)

(ஆ) சமபயன் வளைகோட்டு ஆய்வின்படி நுகர்வோன் சமநிலை எவ்வாறு பெறப்படும் என விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) பதிலீட்டு விளைவு, மற்றும் வருமான விளைவு என்பவற்றை வேறுபடுத்திக்காட்டும் ஹிக்ஸ் (Hicks) மாதிரியை வரைபடத்தின் உதவியுடன் விளக்குவதுடன், அது சுலட்ஸ்கி (Siutsky) மாதிரியிலிருந்து எவ்விதம் வேறுபடுகின்றது என்பதையும் விளக்குக?

(10 புள்ளிகள்)

03. (அ) மொத்த உற்பத்தி (TP), சராசரி உற்பத்தி (AP), எல்லை உற்பத்தி (MP) என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக?

(05 புள்ளிகள்)

(ஆ) மாறும் காரணி ஒன்றினைக் கொண்ட குறுங்கால் நிறுவனம் ஒன்றின் உற்பத்திச் செயற்பாட்டின் பிரதான கட்டங்களை விளக்குக?

(10 புள்ளிகள்)

(இ) நீண்ட காலத்தில் நிறுவனத்தின் உற்பத்திச் சமநிலை எவ்வாறு நிர்ணயிக்கப்படும் என காட்டுக.

(05 புள்ளிகள்)

04. (அ) பின்வரும் செலவுகள் பற்றி சுருக்கமாக விளக்குக?

(i) சராசரி நிலையான செலவு (AFC)
(ii) சராசரி மாறும் செலவு (AVC)
(iii) சராசரி மொத்த செலவு (ATC)
(iv) மொத்த நிலையான செலவு (TFC)
(v) மொத்த மாறும் செலவு (TVC)

(10 புள்ளிகள்)

(ஆ) குறுங்காலத்தில் சராசரிச் செலவுக் கோடு, எல்லைச் செலவுக் கோடு என்பவற்றுக்கிடையே உள்ள தொடர்பை வரைபடம் மூலம் விளக்குக?

(05 புள்ளிகள்)

(இ) நீண்ட காலத்தில் சராசரி மொத்த செலவுக் கோட்டின் வடிவத்தை தீர்மானிக்கும் காரணிகளை விளக்குக?

(05 புள்ளிகள்)

05. (அ) நிறைபோட்டிச் சந்தை அமைப்பை சுருக்கமாக விளக்குக?

(05 புள்ளிகள்)

(ஆ) நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் குறுங்கால சமநிலை, நீண்டகால சமநிலையிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?

(10 புள்ளிகள்)

(இ) "நிறைபோட்டி நிறுவனத்தின் குறுங்கால நிரம்பல் வளையி அதன் எல்லைச் செலவு வளையியாகும்." என்பதை தெளிவுபடுத்துக?

(05 புள்ளிகள்)

06. (அ) தனியுரிமைச் சந்தை அமைப்பின் பிரதான அம்சங்களை விளக்குக?

(05 புள்ளிகள்)

(ஆ) தனியுரிமை நிறுவனம் ஒன்றின் கேள்விக் கோட்டின் இயல்பினை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக?

(05 புள்ளிகள்)

(இ) "தனியுரிமையாளன் தனது வெளியீட்டுத் தீர்மானத்தை மேற்கொள்ள கேள்விக் கோட்டின் நெகிழ்ச்சியுடைய பகுதியையே தேர்ந்தெடுக்கிறான்" விளக்குக?

(10 புள்ளிகள்)

LIBRARY
11 FEB 201
Eastern University, Sri Lanka

07. (அ) "அதிக நிறுவனங்கள் சிறிய அளவில் வேறுபட்ட தன்மை கொண்ட பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபடுவதே தனியுரிமைப் போட்டியாகும்." உதாரணங்களை தந்து விளக்குக?

(10 புள்ளிகள்)

(ஆ) தனியுரிமைப் போட்டிச் சந்தையில் நிறுவனங்கள் ஏன் விளம்பரங்களில் பெருமளவிற்கு தங்கியிருக்கின்றன? விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) சிலருமைச் சந்தை அமைப்பினை விளக்கி, அத்தகைய அமைப்பு காணப்படுவதற்கான அடிப்படைக் காரணங்களைக் கூறுக.

(05 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக?

(அ) விலை நுகர்ச்சி வளைகோடு
(ஆ) உற்பத்தி விரிவுப் பாதை
(இ) ஒதுக்கப்பட்ட இயலளவு
(ஈ) முறிந்த கேள்விக் கோடு

(ஒவ்வொன்றுக்கும் 05 புள்ளிகள்)

*******